


■ 'இந்தோ - பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ்' அமைப்பின் சார்பில், புற்றுநோய் பற்றிய மாநாடு, சென்னையில் நடந்தது. அமைப்பின் நிறுவனர் மற்றும் செயலர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், மாநாடு குறித்து பேசினார். அருகில், லண்டன் பல்கலைக்கழக கல்லூரி பிரிவு பேராசிரியர் லார்டு காக்கர் மற்றும் இந்தோ - பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவின் சென்னை மற்றும் முன்னாள் அலுவல் முறை தலைவர்கள் மைக் நிதாவ்ரியானகிஸ், ஹாவர்டு லயான்ஸ்.

# புற்றுநோயால் பாதிக்கப்படும் பெண்கள் எண்ணிக்கை குறைகிறது

சென்னை, செப். 7-

''ஆண்டிற்கு, 12 லட்சம் புதிய புற்றுநோயாளிகள் கண்டறியப்படுகின்றனர். புற்றுநோயால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை, குறைந்து வருகிறது,'' என, புற்றுநோய் குறித்த, இரண்டு நாள் கருத்தரங்க, துவக்க விழா நிகழ்ச்சியில், டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் தெரிவித்தார்.

'இந்தோ - பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ்' அமைப்பின் சார்பில், புற்றுநோய் குறித்த, இரண்டு நாள் கருத்தரங்கம், சென்னையில் நேற்று துவங்கியது.

அதில், அமைப்பின் நிறுவனர் மற்றும் செயலர், டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் பேசியதாவது:

இந்த கருத்தரங்கில், பிரிட்டனை சேர்ந்த, 50 புற்றுநோய் நிபுணர்களும், இந்தியாவை சேர்ந்த, 50 புற்றுநோய் நிபுணர்களும் பங்கேற்கின்றனர்.

இந்தியாவில், 16 வித மான புற்றுநோய்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில், ஆண்களுக்கு வாயில் ஏற்படும் புற்றுநோயும், பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை வாய் புற்றுநோயும் முக்கியமானவை. அவை அதிகளவில் உள்ளன.

புற்றுநோயை குணப்படுத்துவது, அதற்கான கருவிகள் குறித்து, கருத்தரங்கில் விவாதிக்கப்பட உள்ளது. கருத்தரங்கின் சாராம்சம் அனைத்தும், இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளது.

இந்தியாவில், ஆண்டிற்கு, 12 லட்சம் புதிய புற்றுநோயாளிகள் கண்டறியப்படுகின்றனர். புற்றுநோயால், அதிகளவில் ஆண்கள் தான் பாதிக்கப்படுகின்றனர். பாதிக்கப்படும் பெண்கள் சதவீதம் குறைந்து வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் பிரிட்டிஷ் துணை கமிஷனர் மைக் நிதாவ்ரியானகிஸ், லண்டன் பல்கலைக் கழக கல்லூரி அறுவை சிகிச்சை பேராசிரியர் லார்டு காக்கர், 'இங்கிலாந்து ஹெல்த் கேர்' மேலாண் இயக்குனர், ஹாவர்டு லயான்ஸ் ஆகியோர் பங்கேற்றனர்.